1968 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அப்படி அரிசி மாற்றம் செய்வதாகத் தகவல் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: சிறைச்சாலைகளில் கைதிகளுக்காக கொடுக்கப்படும் எண்ணெய், சீக்காய் போன்றவை பற்றாக்குறையாக இருக்கின்றன. அதைப் போக்க அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா? அவர்களுக்குக் கொடுக்கப்படும் துணி மணிகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை அன்றாடம் சுத்தப்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதே அவையெல்லாம் சிறந்த முறையில் கவனிக்கப்படுகிறது.

திரு. மா. பா. சாரதி: கைக்குத்தல் அரிசி பார்ப்பதற்குச் சிகப்பாக இருக்கிறது. அதோடு இரும்புப் பாத்திரங்களில் சிறைகளில் சமையல் செய்கிறார்கள். அதனால் அந்தச் சாதம் கறுத்து விடுகிறது. ஆகவே, வேறு பாத்திரங்களில் சமையல் செய்வதற்கு வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அரிசி மிகவும் வெள்ளையாகி விட்டால் சத்துக் குறைந்து விடுவதாகச் சொல்லுகிறார்கள். சமையல் செய்யும் பாத்திரத்தை மாற்றுவது பற்றி யோசித்தோம். அதைப்பற்றி ஆராய்ச்சி செய்து என்ன மாதிரிப் பாத்திரங்களைப் பயன்படுத்தலாம் என்பது பற்றிச் சொல்லும்படி தலைமைச் சிறை அதிகாரியைக் கேட்டிருக்கிறோம்.

திரு. எஸ். பரமசிவம்: கைக்குத்தல் அரிசி சத்துள்ள உணவு என்பதாலும், ஆயிரக்கணக்கான மக்கள் அதனாலே வாழ்க்கை நடத்துகிறார்கள் என்பதாலும் அரிசன உணவு விடுதிகளுக்கு மட்டுமல்லாமல் அனைத்து மாணவ உணவு விடுதிகளிலும் கைக்குத்தல் அரிசியைப் போட அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: காதி போர்டு துணைத் தலைவர் அவர்கள் அக்கறையோடு இந்தக் கேள்வியைக் கேட்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

சென்னை பொது மருத்துவ மனை

* 59 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை (ஜெனரல்) மத்திய மருத்துவ மனையில் நோயாளிகளுக்கு ஏ-வகுப்பு, பி-வகுப்பு அறைகள் கிடைப்பது கடினமாக இருப்பது அரசினருக்குத் தெரியுமா?

(இ) ஆம் எனில், அதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) சென்னை அரசாங்க பொது (ஜெனரல்) மருத்துவ மனையில் எல்லா வகுப்பு வார்டுகளிலும், குறிப்பாக பொது வார்டுகளில் இடம் கிடைப்பது கடினமாகவே இருக்கிறது.

(இ) அம் மருத்துவ மனையில் இருக்கும் அங்கிகரிக்கப்பட்ட படுக்கைகளைவிட அதிக எண்ணிக்கை உள்ள நோயாளிகள் அனுமதி கோருவதே மேற்குறிப்பிட்ட கடின நிலைக்குக் காரணம் ஆகும். அதிக கட்டிடங்கள் புதிதாக அமைப்பதன் மூலம் இந் நிலையைத் தீர்க்கலாம். ஆனால் அம் மருத்துவ மனையில் மேலும் கட்டிடங்கள் கட்டுவதற்குப் போதிய இட வசதி இல்லை. சென்னை நகரில் உள்ள இதர அரசாங்க மருத்துவ மனைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கான வசதிகளைப் பெருக்குவதே இதற்குரிய மாற்றமாகும். இதற்காக சென்னை நகரிலுள்ள சில அரசாங்க மருத்துவ மனைகளில் மேலும் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. கொளத்தூர் கோதண்டம் : குறிப்பாக, சென்னை மத்திய மருத்துவ மனையில் ஏ வகுப்பு, பி வகுப்பு போன்றவற்றில் இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் படுக்கைகள் வழங்குவதிலும் ஊழல்கள் இருப்பதாகப் பரவலாகப் பேசப் படுகிறது. ஆகவே, சென்னை மத்திய மருத்துவ மனைக்குப் புதிய கட்டிடங்கள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏ வகுப்புகள், பி வகுப்புகள் ஆகியவற்றில் இடம் ஒதுக்குவதற்குக் குறிப்பிட்ட விதி முறைகள் இருக்கின்றன. அவை அனுசரிக்கப்பட்டு வருகின்றன. ஊழல்கள் இருந்தால் குறிப்பாகக் கனம் அங்கத்தினர் அதைப்பற்றிக் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும். இப்போது மத்திய மருத்துவ மனைக்காகப் புதிய கட்டிடங்களும் கட்டப்பட்டு வருகின்றன.

DR. H. V. HANDE : Sir, what is the number of 'A' class and 'B' class wards and the number of beds in 'A' class and 'B' Class in the General Hospital? In view of the lack of space in the hospital compound, there was a proposal to extend the hospital to the place where at present the jail is located. What is the stage in which that proposal is at present?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : So far as 'A' class is concerned, there are seven beds of which two are for V.I.Ps. In 'B' class for men there are 35 beds and for women 24 beds.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்த கேள்வி . . .

திரு. கே. விநாயகம் : ஒரே ஒரு துணைக் கேள்வி கேட்க அனுமதி கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்குக் கொடுத்தால் ஒவ்வொருவரும் கேட்பார்கள்.

1968 ஆகஸ்ட் 20]

திரு. கே. விஞயகம் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், ஹாண்டே அவர்கள் கேட்ட கேள்வி ஆஸ்பத்திரியில் இடம் பற்ருக் குறையாக இருப்பதால் தற்போது ஜெயில் இருக்கும் இடத்தையும் ஆஸ்பத்திரிக்காக எடுத்துக் கொள்ளும் உத்தேசம் இருக்கிறதா என்பது. அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லே.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுக்கு எப்படி கேள்வி கேட்க உரிமை இருக்கிறதோ அதே போன்று அமைச்சர்களுக்கு விடை அளிக்காமல் இருக்கவும் உரிமை இருக்கிறது. ஆகவே, இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லே.

பஞ்சாயத்து யூனியன் மருந்தகங்களிலுள்ள சிப்பந்திகள்

* 60 விஞ—**திரு. சி. கோவிந்தராசன் :** மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

அரசினர் மருத்துவ மனேகளில் வேலே செய்யும் எம்.என்.ஓ. போன்ற சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்படும் பென்ஷன் போன்ற எல்லா வசதிகளேயும் பஞ்சாயத்து யூனியன் மருத்துவ மனேகளிலுள்ள எம்.என்.ஓ. போன்ற சிப்பந்திகளுக்கு நீட்டிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனேயிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லே.

திரு. சி. கோவிந்தராசன் : அரசினர் மருத்துவ மனேயில் உள்ள எம்.என்.ஓ. போன்றவர்களும், பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரியில் உள்ள எம்.என்.ஓ. போன்றவர்களும் ஒரே மாதிரி வேலேயைச் செய்கிருர்கள். ஒரே மாதிரி வேலேகளேச் செய்து ஒரே மாதிரி தகுதிகளேப் பெற்றிருக்கிற அவர்கள் வேறு இலாகாவிலே பணி புரிகிற காரணத்தால் பென்ஷன் போன்ற சில சலுகைகள் அவர்களுக்குக் கிடைக்காமல் இருப்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்து அவர்களுக்கும் அந்தச் சலுகைகளேக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பஞ்சாயத்து யூனியனில் பணி புரிகின்ற ஊழியர்களில் ஆசிரியர்களேத் தவிர வேறு யாருக்கும் பென்ஷனரி பெனிபிட்ஸ் கிடையாது. அவர்களே ஒரேவிதமாக நடத்துவது பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

Non-Tamil I.A.S. Officers

* 41 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the cash award scheme formulated for non-Tamil Indian Administrative Officers serving in this State?

THE HON. THIRU C. N. ANNADURAI : At the instance of the Government of India, the State Government are giving a cash award of Rs. 1,000 for the I.A.S. Officers borne on the Madras